எஸ்.டி.சி .எண். 2650/2023 நாள்– 09.02.2026 பக்கம் /

ம.சா.1.சந்தோஷ் த/பெ.குப்புச்சாமி

எதிரி ஆஜர்

C.M.P 58/2024 கடந்த 19.01.2024 அன்று மனு அனுமதிக்கப்பட்டு எதிரிதரப்பில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.

1) நான் M.Sc (IT) படித்துள்ளேன். எனக்கு பூர்வீகமே கரூர். கரூர் மாநகராட்சி எல்லைக்கு மேல்புறம் உள்ள ஆத்தூர் சோலியம்மன் கோவில் உள்ளது தெரியுமா என்றால் தெரியும். அந்த கோவிலில் அர்ச்சனை சீட்டு வழங்கும் தொழில் நாங்கள் செய்து வருகிறோமா என்றால் எனது அப்பா தற்காலிகமாக செய்து வருகிறார். எனது தகப்பனாரை உள்ளூர் காரர்கள் மீசைக்காரர் என அழைபபார்கள். எனக்கு தற்போது 29 வயது ஆகின்றது. என்னுடைய தொழில் விவசாயம், ரியல்எஸ்டேட் மற்றும் இரண்டு நான்கு சக்கர வாகனங்களை வாங்கி விற்கும் தொழில செய்து வருகின்றேன். நான் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேனா என்றால் இல்லை.

2) நான் கரூா வையாபுரி நகர் 2வது கிராஸ் க.எண்.88, ரிதம் எலெக்ட்ரிக்கல்ஸ் பில்டிங்கில் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேனா என்றால் இல்லை. ஆனால், எனக்கு அங்கு அறை உள்ளது அதில் நான் தங்குவது வழக்கம். எனக்கு ரியல் எஸ்டேட், விவசாம், மற்றும் இரணடு நான்கு சக்கர வாகனங்கள் வாங்கி விற்கும் தொழிலோ கிடையாது என்றால் சரியல்ல. ரியல் எஸ்டேட் தொழில் செய்வதற்கும், இரண்டு நான்கு சக்கர வாகனங்கள் வாங்கி விற்கும் தொழில் செய்வதற்கும் நான் அராசங்கத்திடம் உரிமம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

நான் இரண்டு, நான்கு சக்கர வாகனங்களை விற்கும்போது அவைகளுக்கு உண்டான செல் ரசீது மற்றும் வாகன உரிமையாளர்கள் பெயர் மாற்றம் சம்மந்தமான ஆவணங்கள் எனது வசம் இருக்கும் என்றால் சரிதான். ரியல் எஸ்டேட் தொழில் சம்மந்தமாக நான் எனது மூலமாக கிரையம் செய்து கொடுத்த ஆவணங்களில் சாட்சி கையொப்பம் இடுவது வழக்கம் என்றால் இல்லை. விவசாயத்தை நான் சொந்த நிலத்திலும், குத்தகை நிலத்திலும் செய்து வருகிறேன்.

3) எனது விவசாய நிலங்களுக்கு சாகுபடி அடங்கல் சான்று உள்ளது என்றால் உள்ளது. அதற்கான பட்டா, அடங்கல் மற்றும் மூல பத்திரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தான் அவ்வாறு விவசாயம் செய்து வருகிறேன் என தெரியும் என்றால் சரிதான். நான் குத்தகைக்கு அனுபவிப்பது சம்மந்தமான ஆவணங்களை உரிமையாளிடம் நான் கேட்டு வாங்கி தருகிறேன். காதம்பாறை கிராமம் குப்புச்சிபாளையத்தை சேர்ந்த ராமசாமி மகன் பெரியசாமி என்பவரின் பூமியை குத்தகைக்கு போட்டு வருகிறேன். ஆனால் சர்வே எண் தெரியாது– உத்தேசமாக 1 ½ ஏக்கர் அனுபவம் செய்து வருகிறேன். நான் அவ்வாறு எந்த பூமியிலும விவசாயம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நானோ எனது குடும்பத்தினரோ வருமான வரி செலுத்தி வருகிறோமா என்றால் இல்லை.

4) என்னுடைய ஊருக்கும் எதிரியின் ஊரான ஸ்ரீவில்லிபுத்துருக்கும் இடையே எவ்வளவு தொலைவு உள்ளது என்றால் சுமார் 300– 400 கி.மீ இருக்கும். முருகராஜன் நிறுவனத்தை எனக்கு வழக்கு தாக்கல் செய்ததற்கு முன்பாக எத்தனை வருடங்கள் தெரியும் என்றால் 7–8 வருடங்களாக தெரியும்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

எதிரியின் நிறுவனம் எனக்கு எப்படி அறிமுகம் என்றால் எதிரியின் ஊரைச் சார்ந்த நபர்கள் ரியல் எஸ்டேட் மற்றும் 2, 4 சக்கர வாகனங்கள் வாங்கி விற்பது சம்மந்தமாக எதிரியின் ஊருக்கு சென்றிருந்த வகையில் தெரியும்.

5) எதிரியின் ஊர் அருகாமையில் நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்துள்ளேன் அந்த ஆவணம் என் கைவசம் உள்ளதா என்று ஞாபகமில்லை. எதிரியின் ஊரில் யாருக்கு இடம், 2, 4 சக்கர வாகனங்கள் வாங்கி கொடுத்தேன் என ஞாபகமில்லை. எதிரியின் ஊரில் உள்ள நபர்கள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து மற்றும் வாகனங்களை விற்பனை செய்வது சம்மந்தமாக அவர்களாகவே என்னிடம் தெரிவித்தால் தான் தெரியும் என்றால் சரிதான். அவர்கள் எனது Facebook, Olx மூலமாக தொடர்பு கொண்டு தெரிவிப்பார்கள். மேற்படி Facebook, Olx ஆகியவற்றின் விபரங்களை நீதிமன்றத்தில் சமர்பித்தால் எனது கூற்று உண்மை என தெரியவறும் என்றால் சரிதான்.

6) எதிரி எனக்கு யார் என்று தெரியாது என்றும், எதிரியின் ஊர்காரர்களுக்கு எந்த சொத்தும் வாகனங்களும் வாங்கி விற்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு கடன் தொகையான ரூ–10 இலட்சம் அதிகப்படியான தொகை என்றால் சரிதான். அவ்வாறு அதிகப்படியான தொகையை நான் எதிரிக்கு கடன் கொடுக்கும்போது எதிரியிடமிருந்தும் எதிரியின் குடும்பத்தாரிடமிருந்தும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் எதுவும் பெற்றேனா என்றால் இல்லை. புரோ நோட், காசோலை மட்டும் தான் வாங்கினேன்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

எதிரி நிறுவனத்தின் Share Certificate மற்றும் Debentures ஆகியவற்றை எதிரியிடமிருந்து கேட்டு பெற்றேனா என்றால் இல்லை. எதிரிக்கு இவ்வழக்கு கடன் தொகையை திரும்ப செலுத்தும், வசதி உள்ளதா என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். எதிரி நடத்தி வரும் பெட்ரோல் பங்கில் வரவு செலவு விவரங்களை கேட்டு பெற்றுக்கொள்ளவில்லை.

7) எதிரி நிறுவனத்தில் GST விவரங்களை கேட்டு பெற்றேனா என்றால் இல்லை. எதிரியின் நிறுவனம் நான் கடன் கொடுத்தாக சொல்லப்படும் தேதியிலிருந்து நாளது தேதிவரை இயங்கி வருகிறா என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. கடந்த 2022ம் ஆணடு எதிரியின் நிறுவனம் மூடப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது– எதிரியின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை எதிரியின் வியாபாரத்திற்காக வங்கியின் அடமானம் செய்து கடன் பெற்றுக் கொண்டார்களா என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. இவ்வழக்கு காசோலை உள்ள வங்கிக்கு சென்று அவரது வரவு செலவு விவரங்களை பார்த்தேனா என்றால் இல்லை. எதிரியின் பெயரில் எதிரியின் குடும்ப உறுப்பினர் பெயரில் பாத்தியப்பட்ட அசையும் அசையா சொத்துக்களின் விவரங்களை வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை.

8) ம.சா.ஆ.1 ன் அசல் எங்கு உள்ளது என்றால் அசலை தான் நீதிமன்றத்தில் ஒப்டைத்தேன். **(நீதிமன்றம் ம.சா.ஆ–1 யை பார்வையிடும் போது Compare with Original என்ற குறிப்பு மட்டும் உள்ளது அசல் இல்லை.**). ம.சா.ஆ–1 புரோநோட்டை எதிரியின் நிறுவனத்திற்காகவோ,

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

நிறுவன தேவைக்காக குறிப்பு இல்லை என்றால் சரியல்ல. வியபாரத்திற்காக என்ற குறிப்பு மட்டும் உள்ளது. நிறுவனத்தின் பெயரை குறிப்பிட்டு ம.சா.ஆ–1 ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ– 1 புரோ நோட்டில் உள்ள எதிரியின் கையொப்பத்திற்கு அருகில் எதிரியின் நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட நபர் என்ற வாசகம் உள்ளதா என்றால் இல்லை. ஆனால் ம.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தி கொடுக்கும் போது நிறுவனத்தில் சீலை கொண்டு வரவில்லை எனவும் பின்னிட்டு வைத்து தருவதாக தெரிவித்தார்.

9) மேலும், அவ்வாறு சீலை எடுதது வர தவறியிருத்தாலும், எதிரியிடம் கையில் அந்த குறிப்பை எழுதி தருமாறு கேட்டுக் கொண்டேனா என்றால் கேட்டேன். ஆனால் சீல் தான் வைத்து தருவேன் என்று கூறினார். நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. ம.சா.ஆ–1 புரோ நோட் மற்றும் ம.சா–ஆ–2 காசோலை ஆகியவற்றிக்கு காலம் சுமார் 1 வருடம் என்றால் சரிதான். அவ்வாறு ம.சா.ஆ–2 காசோலையை எதிரி எனது வீட்டிற்கு கொண்டு வந்து கொடுக்கும் போது ம.சா.ஆ–1 புரோ நோட்டில் மேற்சொன்னவாறு சீல் வைத்து தருமாறோ, எழுதித்தருமாறோ கேட்னோ என்றால் அடித்தல் திருத்தல் வேண்டாம், சீலை மறந்து வைத்துவிட்டு வந்துவிட்டேன். புதிதாக வேறு புரோ நோட் எழுதி தருவதாக எதிரி என்னிடம் தெரிவித்தார். அவ்வாறு எதிரி வேறு புரோ நோட்டை எழுதி கொடுத்தா என்றால் இல்லை. புரோ நோட் மற்றும் காசோலைக்கு இடைபட்ட ஒரு வருட காலத்தில் அசல், மற்றும் வட்டி தருமாறு கேட்டீர்களா என்றால் எனது போன் செய்து பார்த்தேன்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

10) எடுக்கவில்லை என்பதால் நேரில் சென்று கேட்டேன். அவ்வாறு நான் எதிரிக்கு தொடர்பு கொண்ட என்னுடைய எண் சொல்லமுடியுமா என்றால் அந்த நம்பர் தொலைந்துவிட்டது தற்போது ஞாபகமில்லை. எதிரியின் செல் நம்பர் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை. ஆனால் எனது செல்போனில் பதிவு செய்துள்ளேன். அந்த செல்போனை நீதிமன்றத்தில் தற்போது காண்பிக்கமுடியுமா என்றால் நான் நீதிமனறத்திற்க்கு வரும் போது எடுத்து வரவில்லை. நான் சொல்வது பொய் என்றாலும், எதிரியின் செல் நம்பர் எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. எதிரியின் குடும்ப உறுப்பினர் விவரம் தெரியாது– எதிரியின் இதர தொழில்கள் எனக்கு தெரியுமா என்றால் டிராக்டர் மற்றும் டயர் தொழில் செய்து வந்தார்.

11) ம.சா.2 பாலகிருஷ்ணனை எனக்க எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் ம.சா.ஆ.1 புரோநோட்டில் கையொப்பம் செய்தபின்பு தான் தெரியும். ம.சா.2 பாலகிருஷ்ணனை ம.சா.ஆ–1 புரோ நோட்டில் கையெழுத்து செய்வதற்கு முருகராஜன் தான் அழைத்துவந்தார். ம.சா.2 க்கும் எதிரிக்கு என்ன பழக்கம் என்று தெரிந்து கொண்டேனா என்றால் ம.சா.2 பாலகிருஷ்ணன் வாகனங்கள் வாங்கி விற்கும் தொழில் செய்து வருதால் எதிரியை அவருக்கு பழக்கம் என தெரிந்து கொண்டேன்.

12) ம.சா.ஆ–1 ஆவணத்தில் எழுதியதும சாட்சியுமான மாதவராவ் மகன் ரகுராமன் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனது வீட்டிற்கு அருகில் குடியிருப்பவர்கள் எனக்கு பழக்கமா என்றால் பழக்கம் தான். ம.சா.ஆ–1 புரோ நோட் எழுதிய நேரம் மதியம் சுமார் 1 அல்லது 2 மணி இருக்கும்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

ம.சா.ஆ–1 ஆவணம் எழுதிக்கொடுக்கும் போது நான் எனது பெற்றோருடன் தான் வசித்து வந்தேன் என்றால சரிதான். நானும் எதிரியும் உறவினரோ ஒரே சமூகத்தை சேர்ந்தவர்களோ என்றால் இல்லை. நாங்கள் நண்பர்களாக மட்டும் தான் இருந்தோம். நான் எனது அப்பா அல்லது எனது வீட்டின் அருகில் உள்ள நபர்களிடம் ம.சா.ஆ–1 ஆவணத்தில் சாட்சியாக கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரிதான்.

13) கடந்த 06.04.2021ம் தேதி தமிழ்நாட்டில் சட்டசபை தேர்தல் நடைபெற்றது என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. தேர்தலுக்கு முன்பு தேர்தல் நடைமுறைகள் வந்துவிட்டது என்றால் தெரியாது. தேர்தல் தேதி அறிவித்த பின்பு தேர்தல் முடியும்வரை ரொக்கமாக ரூ. 50 ஆயிரத்துக்கு மேல் கையிருப்பாக வைக்க கூடாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது– 12.03.2021ம் தேதியில் சட்டசபை தேர்தல் அறிவிக்கப்பட்டுவிட்டது என்றும்,

14) அதனால் நான் கைவசம் வைத்திருக்கும் ரொக்கத்திற்கு கணக்கு வைத்திருக்க வேண்டும் என்று சொன்னால் நான் விவசாய தொழில் செய்து வருகிறேன். அதனால் என்னால் காட்ட முடியாது. விவசாயம் மூலம் வருமாணம் கிடைத்தாக சொல்லும் நான் என்ன பயிரிட்டேன் யாரிடம் விற்பனை செய்தேன் என்று சொல்லமுடிமயா என்றால் எனக்கு ஆடுமாடு உள்ளது ,சோளம், வெங்காம், மிளகாய்போன்றவற்றை விற்றேன். என்னை தேடி வந்து கேட்டவர்களிடம் விற்னேன். என்னிடம்பொருட்கள் வாங்கியவர்கள் ரொக்கமாக தான் கொடுத்தார்கள் என்னிடம் வங்கி பரிவர்த்தனை செய்யவில்லை.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

விவசாய பொருட்கள் விற்பனை செய்தது மூலம் எனக்கு ரூ– 10 இலட்சம் கிடைத்தாக சொல்வது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

14) எனக்கு வழக்கு கடனை கொடுக்கும் அளவிற்கு வருமானம் இல்லை என்றும், அதனால் தான் அதனை நிரூபிக்கும் ஆவணங்களை நீதிமன்றத்தில் ஒப்படைகக்வில்லை என்று சொன்னால் வருமானம் உள்ளது அதனை காண்பிக்க ஆவணம் தான் இல்லை. ரூ. 10 இலட்சம் எத்தனை ரூபாய் தாள்கள் கொடுத்தேன் என்றால் ரூ– 1000, ரூ– 100/– தாளுகளாக கொடுத்தேன். வங்கியிலிருந்து பணம் எடுக்கவில்லை. ம.சா.ஆ–3 ல் குறிப்பிட்டுள்ள வங்கியை தவிர வேறு வங்கிகள் எனக்கு இல்லை. நான் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரி எவ்வாறு அறிமுகமானர் என்பதை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கு கடன் தொகை கொடுப்பதற்கும் புரோ நோட் எழுதுவதற்கும் சுமார் 1 மணி நேரம் ஆனது– வழக்கு புரே நோட்டில் ஒரே போன தான பயன்படுத்தப்பட்டுள்ளது.

15) வீட்டில் எப்போது கைரேகை பெட்டி வைத்திருபபேன். வழக்கு கடன் தவிர்த்து வேறு நபர்களுக்கு ஒன்று அல்லது இரண்டு நபர்களுக்கு கடன் கொடுத்தேன். கரூர் நீதிமன்றத்தில் இவ்வழக்கு இல்லாமல் 1 அல்லது 2 வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்குகள் புரோ நோட் வழக்குகளா அல்லது காசோலை வழக்குகளா என்றால் பார்க்க வேண்டும். மேற்சொன்ன மற்ற இரண்டு வழக்குகள் கடன் தொகையை வசூல் செய்வதற்காக என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது–

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

மேற்சொன்ன இரண்டு வழக்குகளின் எதிரிகளின் பெயர் தெரியும் முகவரி தோராயமாக தான் தெரியும். மேற்சொன்ன வழக்குகளில் புரோ நோட் அல்லது காசோலை சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆவணத்தை பார்த்தால் தான் தெரியும். நான் புரோ நோட்களில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை.

16) எதிரிக்கும் எனக்கும் அறிமுகம் இல்லை என்றாலும், வழக்கு கடன் தொகையை எதிரிக்கு நான் கொடுக்கவில்லை என்றாலும், அதனால் எதிரிக்கு வழக்கு கடன் தொகையை திரும்ப செலுத்தும் சட்டப்படியான கடப்பாடு இல்லை என்றாலும்,சரியல்ல. நான் இவ்வழக்கின் உண்மையான புகார்தாரர் இல்லை என்றால் சரியல்ல. கரூர் டவுன் வையாபுரி நகர், எண். 89, ஆர்த்தி டவர் இரண்டாவது மாடியில் இயங்கி வரும் GRS Traders என்ற நிறுவனத்தின் பங்குதாரர்களான ரவிசங்கர், கிருத்திகா, லட்சுமி,வாசுகி மற்றும் பழனிசாமி ஆகியோர்களில் கையாளாக இருந்து கொண்டு நானும் மேற்சொன்னவர்களின் துாண்டுதலின் பேரில் ம.சா.ஆ–2 மற்றும் ம.சா.ஆ–1 ல் எழுதியதும் சாட்சியுமாக காட்டப்பட்டுள்ள பசுபதிபாளையம் வடக்கு தெருவை சேர்ந்த மாதவாராவ் மகன் ரகுராமன் ஆகியோர்கள் ஒன்று சேர்ந்து கொண்டு ம.சா.ஆ1 புரோட்டை உற்பத்தி செய்து இவ்வழக்கையும் மேற்சொன்ன நிறுவனத்தின் நிறுவனத்தினர் இந்த புகாரின் எதிரியின் மீது மாண்பமை கரூர் மாவட்ட நீதிமன்ற கோப்பில் தாக்கல் செய்யப்பட்ட வணிக வழக்கு எண். 11/2019 மற்றும் எதிரியின் மனைவியான சாந்தி என்பவரின் மீது

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

STC 2090/2023 மற்றும் STC 303/2025 என்ற வழக்குகளையும் மற்றும் இதே எதிரியின் மீது STC 369/2025 என்ற வழக்கையும் எதிரியின் மனைவியின் மீது பரமத்தி சார்பு நீதிமன்றத்தில அசல் வழக்கு எண். 95/2025 என்ற வழக்கையும் தாக்கல் செய்து நடத்தி வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய புகார் பொய்யானது என்பதாலும் அதனால் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஓம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்
நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

**எஸ்.டி.சி .எண். 2650/2023 நாள்– 09.02.2026 பக்கம் /**

**ம.சா.2.பாலகிருஷ்ணன் த/பெ.ஸ்ரீராமலு**

**எதிரி ஆஜர்**

**C.M.P 58/2024 கடந்த 19.01.2024 அன்று மனு அனுமதிக்கப்பட்டு எதிரிதரப்பில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.**

1) என்னுடைய நிரந்தர முகவரி குறித்து நீதிமன்றத்தில் ஆவணங்கள் ஏதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியவில்லை. நீதிமன்றத்தில் எழுத்துப்பூர்வமாக வாக்குமூலம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் மாநில அரசின் அனுமதி பெற்று தொழில் Travel Agency தொழில் நடந்தி வருகிறேன். மேற்சொன்ன தொழில் தான் நடத்தி வருகிறேன் என்பதை காண்பிக்க ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை நான் Travel Agency தொழில் செய்யவில்லை நடத்தவில்லை என்றால் தவறானது– நான் பைனான்ஸ் தொழில் எதுவும் நடத்தவில்லை. எனக்கு புகார்தாரரை எவ்வளவு ஆண்டுகளாக தெரியும் என்றால் எதிரி புகார்தாரரிடம் அழைத்து சென்று புரோ நோட்டில் கையொப்பம் செய்யும் போது தான் தெரியும். இவ்வழக்கு குறித்து சாட்சியம் அளிக்க சம்மன் எதுவும் வந்ததா என்றால் இல்லை.

2) நீதிமன்றத்திற்கு இன்று சாட்சியம் அளிக்க என்னை அழைத்து வந்தது யார் என்றால் புகார்தாரர் சொன்னதன் பேரில் வந்துள்ளேன். நான் 10 மற்றும் 12 வகுப்பு தேர்ச்சி பெற்ற நாள் மாதம் எனக்கு தெரியாது மறந்துவிட்டது. என்னுடைய மனைவியின் பிறந்த நாள் வருடம் தெரியும்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

எதிரி முருகராஜனை எத்தனை ஆண்டுகளாக எனக்கு தெரியும் என்றால் சுமார் 8 ஆண்டுகளாக தெரியும். என்னுடைய பெயரில் இரண்டு வாகனங்கள் உண்டு.

3) முதல் வண்டி 29.07.2011 இரண்டாவம் வண்டி வாங்கி தேதி ஆண்டு தெிாயாது. எதிரி என்னுடைய நண்பர் ஆவார். ஆனால் என்னுடைய உறவினரா அல்லது சமூகத்தை சேர்ந்தவரோ கிடையாது. எதிரியின் குடும்ப விவரம் தெரியாது. எதிரி பெட்ரோல் பங்க் வைத்துள்ளார், டிராக்டர் ஏஜென்சி வைத்துள்ளார். எதிரியின் பெட்ரோல் பங்க்கு சுமார் 6-7 வருடங்களுக்கு முன்பு சென்றேன். எதிரியின் ஊருக்கு கார் வாங்கி விற்க சென்ற போது தெரியும். கார் வாங்கி விற்பனை செய்யும் தொழிலுக்கு தமிழ்நாடு அரசிடம் அனுமதி பெற்றேனா என்றால் இல்லை. எதிரியின் ஊரில் நான்கு சக்கர வாகனம் வாங்கி விற்றுள்ளேன். அவ்வாறு விற்றால் விற்பவரிடம் ரொக்க ரசீது மற்றும் பெயர் மாற்ற சான்றிதழ் ஆகியவற்றைற வாங்குவோம் என்றால் சரிதான்.

4) நான் எதிரியின் ஊரிலிருந்து 4 சக்கர வாகனத்தின் விபரம் உரிமையாளர் விவரம் சொல்ல முடியுமா என்றால் ஞாபகமில்லை. நான் 2, 4 சக்கர வாகனங்களை வாங்கி விற்பனை செய்த ஆவணங்களின் விவரங்களை பற்றி வட்டார போக்குவரத்து அலுவலரிடம் நகல்கள் வாங்கி ஒப்படைக்க முடியுமா என்றால் நான் இடைதரகராக மட்டுமே இருந்துள்ளேன். வாகனம் விற்கும் மற்றும் வாங்கும் தொழிலை 15 வருடமாக செய்து வருகிறேன். நான் வாங்கி விற்கும் வாகனங்களின் விவரங்களை குறித்து வைத்துள்ளேனா என்றால் இல்லை.

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

நான் எந்த காலத்திலும Travel Agency மற்றும் வாகனம் வாங்கி விற்பனை செய்யும் தொழியை செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எதிரியை யார் என்று தெரியாது என்றாலும், புகார்தாரர் தான் எதிரியை அறிமுகம் செய்தார் என்றால் சரியல்ல.

5) எதிரிக்கு புகார்தாரர் யார் என்று தெரியாது என்றாலும் GRS Traders நிறுவனத்தில் பங்குதாரர்கள் புகார்தாரர் மூலம் இந்த வழக்குகளையும் இன்னும் காசோலை மோசடி வழக்குகளையும் எதிரியின் மீதும் அவருடைய மனைவியின் மீதும் மற்றும் சிவில் வழக்குகளையும் தாக்கல் செய்துள்ளார் என்றும், புகார்தாரர் நான் மற்றும் வழக்கு புரோ நோட்டில் எழுதியதும் சாட்சியமாக காட்டப்பட்டுள்ள பசுபதிபாளையம், வடக்கு தெருவை சேர்ந்த மாதவராவ் மகன் ரகுராமன் ஆகியோரும் சேர்ந்த  வழக்கு புரோ நோட்டை தயார்செய்து இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் GRS Traders நிறுவனம் தெரியாது– ரகுராமனை தான் தெரியும். ரகுராமனை இந்த வழக்கு ம.சா.ஆ–1 எழுதும்போது தான் தெரியும். ரகுராமனை  ம.சா.ஆ–1 எழுதிய பின்பு கரூரில் பார்த்துள்ளேன்.

6) ஆனால் அவரது தொழில் தெரியாது. புகார்தரர் விவசாயம் மற்றும் கார் டீலிங் செய்து வருகிறார். ம.சா.ஆ. 1 ற்கு பின்னிட்டு தான் ம.சா.1 யை தெரியும். ம.சா.ஆ–1 எழுதப்பட்ட போது மதியம் சுமார் 1 மணி இருக்கும். ம.சா.–ஆ1 எழுதும்போது அவர் மட்டும் தான் இருந்தார் வேறுயாரும் இல்லை. ம.சா.ஆ–1 பயன்படுத்திய பேனாக்களின் எண்ணிக்கை எத்தனை என்று தெரியுமா என்றால் ஞாபகமில்லை. நான் எனது பேனாவில் கையொப்பம் செய்தோனா என்றால் சந்தோஷ் கொடுத்த பேனாவில் கையொப்பம் செய்தேன்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

ரகுராம் மற்றும் எதிரி எந்த பேனாவில் கையொப்பம் செய்தனர் என்று ஞாபகமில்லை. கடன் தொகை ரூ. 100 மற்றும் ரூ.500 தாள்கள் அடங்கிய ரூபாய் கொடுக்கப்பட்டது. ம.சா.ஆ–1 ல் கண்ட விவரங்களை எதிரி சொல்லி தான் தெரியும்.

7) புரோ நோட்டில் அடித்தல் திருத்தல் இல்லை. ம.சா.ஆ–1 ரேகை வைக்க வேண்டும் என்று யார் சொன்னார்கள் என்றால் சரியாக ஞாபகமில்லை. நான் சாட்சியம் அளிப்பது போல் கடந்த 05.04.2021ம் தேதியன்று புகார்தாரிடமிருந்து எதிரி கடன் தொகை எதுவும் பெறவில்லை என்றும், அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்று சொல்வதும், அந்த ம.சாஆ–1 ல் ரகுராம் எழுதியும் சாட்சியமாக இருந்துள்ளார் என்று சொல்வதும் பொய்யானது என்றால் சரியல்ல. எதிரியின் அசையும் அசையா சொத்தின் விவரம் எனக்கு தெரியாது– நான் இந்த வழக்கை தவிர வேறு எந்த வழக்கிலும் சாட்சிகள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கவில்லை. வேறு புரோ நோட்டில் சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. சாட்சி பின்னிட்டு ஞாபகமில்லை என்று கூறினார். நான் புகார்தாரருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**புகர்தாரர் தரப்பில் மறுவிசாரணை**

சாட்சியிடம் ம.சா.2 பிரமாண வாக்குமூலத்தை காண்பித்து அதில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் என்னுடையது தான். ம.சா–2 பிரமாண வாக்குமூலத்தை நீதிமன்றததில் யார் தாக்கல் செய்தனர் என்றால் எனது வழக்கறிஞர்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

**நீதிமன்ற கேள்வி –** இவ்வழக்கு சம்மந்தமாக சாட்சி சொல்ல நீதிமனற்த்திற்கு வந்தீரா ?

**பதில் –** ஒரு முறை வந்து சாட்சியம் அளித்துள்ளேன்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஓம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.